**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.274/2021**

**Prosecution Witnesses : 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : புகழேந்தி | Caste | : |
| Father Name | : **மாணிக்கம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(07.07.2025)**

**முதல் விசாரணை**

நான் முத்தரசன்குப்பம் கடலூர் மாவட்டம், பண்ரூட்டி தாலுகா என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரி விஜய்யை எனக்கு தெரியும். கடந்த 06.01.2021 அன்று தூத்துக்குடியில் இருந்து ஈரோட்டிற்கு நிலக்கரி லோடு ஏற்றிக்கொண்டு டிஎன் 69 பி.கே.1654 என்ற அசோக் லேலேண்ட் லாரியை நான் ஓட்டிக்கொண்டு கப்பலூர் காலனி அருகே உள்ள இண்டியன் ஆயில் கார்பரேசன் எதிர்புறத்தில் நான் சென்று கொண்டிருந்த போது எனக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த டிஎன் 69 ஏ.எல் 7796 என்ற டாடா பென்ஸ் லாரியானது நிலக்கரியை ஏற்றிக்கொண்டு பழனி நோக்கி சென்று கொண்டிருந்தது. எனக்கு முன்னால் சென்ற மேற்படி டாடா பென்ஸ் லாரியின் இடதுபுறம் உள்ள 2 டயர்களும் வெடித்து இடதுபக்க இண்டிகேட்டர் லைட் போட்டு ஓரமாக நிப்பாட்ட முயலும் போது எங்களுக்கு பின்னால் வந்த ஆஜர் எதிரி ஓட்டி வந்த அசோக் லேலேண்ட் தோஸ்ட் டிஎன் 58 மற்ற எண்கள் நினைவு இல்லை. கோழி ஏற்றிக்கொண்டு வந்த மேற்படி தோஸ்த் வாகனமானது முன்னால் சென்ற 69 ஏ.எல். 7796 என்ற பென்ஸ் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது. தோஸ்த் வண்டி வந்த வேகத்தில் கண்ட்ரோல் இல்லாமல் பென்ஸ் லாரி மீது மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது.

ஆஜர் எதிரி ஓட்டி வந்த தோஸ்த் வாகனத்தில் வந்தவர்கள் சம்பவயிடத்தில் இறந்துவிட்டார்கள். 2 பேரும் ஆண்கள் ஆவார்கள். மேற்படி விபத்தில் ஆஜர் எதிரிக்கு தலையில் அடிபட்டு இரத்தம் வந்தது. கையிலும் அடிபட்டு இருந்தது. இவர்களை தவிர்த்து வேறு யாருக்கும் இவ்வழக்கில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. 108 ஆம்புலன்சு மூலம் ஆஜர் எதிரியை திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம்., மேற்படி பென்சு லாரியை வெற்றிவேல் என்பவர் ஓட்டி வந்தார். அவர்தான் இந்த வழக்கு சம்பந்தமாக திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். காவல் ஆய்வாளர் சம்பவயிடத்திற்கு வந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 8 வருடங்களாக வண்டி ஓட்டி வருகிறேன் என்றால் சரிதான். சம்பவத்தின் போது வெற்றிவேல் ஓட்டி வந்த வண்டிக்கும் எனது வண்டிக்கும் சுமார் 200 மீ தொலைவில் வந்து கொண்டிருந்தது. 200 மீ தொலைவில் பின்னாடி என்ன நடந்தது என்ற விபரத்தை பார்க்க முடியாது என்று சொன்னால் பார்க்க முடியும். நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வெற்றிவேல் சைகை எதுவும் காண்பிக்கவில்லை என்றால் சரிதான். இண்டிகேட்டர் போட்டு இடதுபக்கம் வந்தார். வெற்றிவேல் என்பவரின் கவனக்குறைவால் தான் இந்த சம்பவம் நடைபெற்றது என்றால் சரியல்ல. சம்பவத்தில் இறந்துபோனவரின் பெயர் எனக்கு தெரியாது. வெற்றிவேல் புகார் கொடுக்க செல்லும் போது நான் உடன் போகவில்லை என்றால் சரிதான். எதிரிக்கு சம்பவத்தின் போது காயமே இல்லை என்றாலும் நான் வழக்கை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

**அரசு தரப்பில் மறுவிசாரணை**

சம்பவம் நடைபெற்ற போது அதிகாலை 2 மணி இருக்கும்.

**எதிரி தரப்பில் மறுவிசாரணை சம்பந்தமான குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதால் அதிகாலை 2 மணிக்கு சம்பவம் நடந்ததாக சொல்வது பொய்யாக சொல்கிறேன் என்றால்

சரியல்ல. நான் சம்பவத்தின் போது வண்டி ஓட்டியதாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.274/2021**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமலை | Caste | : |
| Father Name | : வீரணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(07.07.2025)**

**முதல் விசாரணை**

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஸ்ரீபராசக்தி என்ற பெயரில் பிராய்லர் கடை வைத்து நடத்திவருகிறேன். ஆஜர் எதிரி விஜயனை எனக்கு தெரியும். அவரை விஜய் என்றும் சொல்வார்கள். விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டியவர் ஆஜர் எதிரியாவார். கடந்த 06.01.2021 அன்று இரவு பாரபத்தியில் இருந்து கோழி லோடு ஏற்றிக்கொண்டு திருமங்கலம் வருவதற்காக டிஎன் 58 ஏடி 2135 என்ற அசோக் லேலேண்ட் தோஸ்த் வாகனத்தை ஆஜர் எதிரி ஓட்டி சிலம்பரசன் என்பவரும் கவின் என்பவரும் உடன் சென்றார்கள். இரவு 2.20 மணிக்கு எனக்கு பேட்ரோல் போலிசார் போன் செய்து மேற்கண்ட தோஸ்த் வண்டி விபத்து ஏற்பட்டுள்ளதாக தகவல் கூறினார்கள். கப்பலூர் பாலம் இறக்கத்தில் உள்ள இண்டியன் ஆயில் கார்பரேசனுக்கு எதிர்புறத்தில் பெரிய லோடு லாரி நின்று கொண்டிருந்தது. அதன் பின்னால் தோஸ்த் வண்டி மோதி விபத்து ஏற்பட்டது. முன்னால் லோடு ஏற்றிக்கொண்டு சென்ற லாரியின் டயர் வெடித்ததால் அதை நிறுத்த முயலும் போது ஆஜர் எதிரி ஓட்டிய தோஸ்த் வாகனம் முன்னால் சென்ற லாரியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துகொண்டேன். சம்பவயிடத்திலேயே கவினும், சிலம்பரசனும் இறந்துவிட்டார்கள். ஆஜர் எதிரிக்கு தோள்பட்டையிலும் தலையிலும் காயம்

இருந்தது. ஆஜர் எதிரியை 108 ஆம்புலன்சுமூலம் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு இருந்து மேல் சிகிச்சைக்காக அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு வைத்து தான் ஆஜர் எதிரியை நான் பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்தை பார்க்கும் போது போலிசார் மற்றும் பயர் சர்வீஸ் நபர்கள் மற்றும் டோல்கேட் நபர்கள் இருந்தார்கள். வெற்றிவேல் என்பவரை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான்.